தகவல். இது திண்டுக்கல் நகராட்சி எல்லைக்குள்ளே இருக்கின்ற பகுதி. நகராட்சி எல்லைக்குள்ளே இந்தக் கட்டிடத்தைக் கட்டுவது என்றால், நகராட்சியின் அனுமதியைப் பெற்றுதான் கட்ட வேண்டும். பில்டிங் ரெகுலேஷன்கள் இருக்கின்றன. கட்டிடம் கட்டுவதற்கு வரைபடம் கொடுத்து, அதற்கான அனுமதியைப் பெற்றுதான் கட்ட வேண்டுமென்று அரசு விதியிருக்கிறது. ஆனால் அந்தக் கோயிலைக் கட்ட அனுமதி கொடுத்த அதிகாரிகள் யார்? அம்மாதிரி கட்டுவதற்கு எவ்வளவு காலம் பிடித்திருக்கும் என்பது தெரியும். அந்த அளவிற்கு அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் அதிகாரிகள் மவுனமாக இதை விட்டுவைத்ததன் நோக்கம் என்ன? காரணம் என்ன? அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, குடிசைகள் போட்டிருக்கிறார்கள். அந்தக் குடிசைகளைப் போடுகின்றபொழுது அந்தக் கோயிலும் வந்து இருக்கிறது. குடிசைகளை அகற்றிவிட்டார்கள். தனிப்பட்டவர்கள் என்ற காரணத்தால் குடிசைகளை அகற்றிவிட்டார்கள். ஆனால் கோயில் என்று வரும்பொழுது நடவடிக்கை எடுப்பதற்கு அஞ்சுவதற்குக் காரணம் கடவுளைக் கண்டு பயந்துகூட இருக்கலாம். ஆகவே இதிலே ஏதாவது செய்தால் நமக்கு ஏதாவது ஏற்பட்டு விடுமோ என்ற பயத்தின் காரணமாக ஒரு வேளை அவர்கள் செய்யாமல் இருக்கலாம். எப்படியோ ஒருவிதத்தில் அந்தக் கோயில் இருக்கின்றது. அதற்கு இடத்தை ஒதுக்கி விட்டோம். எனவே இப்போது பிரச்சினை இல்லை. இப்போது விளையாட்டு அரங்கம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தர்மபுரியில் விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டம்.

308—(*வினா எண். 20601)—திரு. சி. கணேசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரியில் ஸ்டேடியம் கட்டும் திட்டம் பற்றிய அரசின் செயற்குறிப்பு தற்போது எந் நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தர்மபுரியில் விளையாட்டு அரங்கம் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து அது துவக்கப்பட்டு விட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 14]

திரு. சி. கணேசன் : தலைவர் அவர்களே, பொதுவாகவே தமிழகத்தில் செங்கற்பட்டு நகராட்சி மாதிரி ஸ்டேடியமே இல்லாத நகராட்சிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நகராட்சி களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஸ்டேடியம் கட்டித்தர ஏதாவது செயற் குறிப்பு இருக்கின்றதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர் களே, நாங்கள் இப்போது தஞ்சாவூர், தர்மபுரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு அனுமதி வழங்கி இருக்கிறோம். அடுத்து நீலகிரி, பெரியார் மாவட்டங்களில் கட்டுவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. அதற்கடுத்த ஆண்டு வருகின்றபோது செங்கற்பட்டு பற்றி நாம் பரிசிலிக்கலாம்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, மாவட்டத் தலைமை இடங்களில் இது போன்ற விளையாட்டு மைதானங் களை அரசு கட்டியுள்ளது. இது வரை எத்தனை கட்டப்பட்டு இருக்கின்றன ? மேலும் எத்தனை கட்ட வேண்டிய திட்டங்களை வரையறுத்திருக்கின்றது ? தாலுக்கா தலைநகரங்களிலும் இது போன்று கட்ட வேண்டும் என்ற வேண்டுகோள்கள் பற்றி அரசுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அதற்கான நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அது எந்த நிலையில் இப்போது இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இது வரையிலும் நாகர்கோவில், மதுரை, கோயம்புத்தூர், சேலம், கடலூர் காஞ்சிபுரம், செங்கற்பட்டு மாவட்டத்திற்கு காஞ்சி புரத்திலே கட்டப்பட்டிருக்கின்றது— பாளையங்கோட்டை, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டிருக் கின்றன. இப்போது தஞ்சாவூர், தர்மபுரி, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. தர்மபுரியில் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. அதன் திறப்பு விழாவிலே நான் கலந்து கொண்டேன். நீலகிரி, பெரியார் மாவட்டங்களில் கட்டுவது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. மீதி மாவட்டங்களுக்கும் நாம் கட்ட வேண்டி இருக்கின்றது. பொது வாக இந்த விளையாட்டு அரங்கங்களைப் பொறுத்த வரையில் அவற்றைக் கட்டுவதில் தவறு இல்லை. ஆனால் அவற்றை முழுமையாகப் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு விளையாட்டு ஆர்வம் எல்லா பகுதிகளிலும் இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே பணத்தைச் செலவழித்து விளை யாட்டு அரங்கத்தைக் கட்டியதற்குப் பிறகு வருடத்திலே நான்கு ஐந்து நாட்கள்தான் அவற்றைப் பயன்படுத்துகிறார்கள் என்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே அவற்றைக் கட்டுவதைப் பொறுத்த வரையில் நாம் சிந்திக்க வேண்டியது இருக்கின்றது.

ஆகவே விளையாட்டு அரங்கம் தேவை; ஆனால் அவற்றை உபயோகப்படுத்துகின்ற அளவுக்கு அந்தந்தப் பகுதிகளில் விளையாட்டு ஆர்வம் தூண்டப்பட வேண்டும். இப்போது அதைத்தான் நாம் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே விளையாட்டு அரங்கம் கட்டுவது என்பது அரசு ஒத்துக் கொண்ட ஒரு கொள்கை தான். ஆனால் இப்படிப்பட்ட நிலைமைகளுக்கேற்ப நாம் அவற்றைக் கட்டி வருகிறோம்.

டாக்டர் .கே. சமரசம்: தலைவர் அவர்களே, தர்மபுரியில் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்த ஸ்டேடியம் கட்டுவது என்பது முடிக்கப்பட்டு அதிலே மாநில அளவுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடந்து முடிந்திருக்கின்றன. அதற்காக அந்த மாவட்ட மக்களின் சார்பாக நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தர்மபுரி ஸ்டேடியம் கட்டுவதற்கு எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது? என்னென்ன விளையாட்டுக்களை அங்கே விளையாடுவதற்குரிய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன? நீச்சல் குளம் அமைக்கப்பட வேண்டும் என்ற அந்தச் செயல் முறைத் திட்டம் உருவாக்கப்பட்டு விட்டதா? அது தயாரிக்கப்பட்டு அவ்வாறு கட்டுகிறார்களா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தர்மபுரி விளையாட்டரங்கம் கட்டுவதற்கு ரூபாய் 5 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்ற விவரம் தான் தரப்பட்டிருக்கின்றது. ஆகவே நீச்சல் குளத்தைப் பற்றிய விவரம் இங்கே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இளையான்குடி யூனியனில் 1982-83-ஆம் ஆண்டுக்கான N.R.E.P. திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை.**

249—(*வினா எண் 17379)—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடி யூனியனில் 1982-83 ஆம் ஆண்டுக்கு NREP திட்டத்தில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) அதிகத் தொகை ஒதுக்க அரசு முன்வருமா?